**தலைப்பு 208 – தேசிய நூதனசாலைகள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.3 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த பொருள் மெய்மையாய்வின் பின்னர் அலுவலக உபகரணங்கள், மின் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் உட்பட வெவ்வேறு பொருளிருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்ட பொருட்கள் 2019 ஆம் ஆண்டின் போது ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதும் கைதவிர்ப்பின் கீழ் அப்பெறுமதி மீளாய்வாண்டின் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | ஏலவிற்பனையில் அகற்றப்பட்ட பொருளிருப்பு பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்ட பொருட்களின் பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்பட வேண்டும். . | கைதவிர்ப்பு செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் இனங்காணப்பட்டு அப்பெறுமதி 2020 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை கணக்குகளிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையினை விட்டுச் சென்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,074,934 ஆன கடன் மீதிகளில் 14 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் பழைய மீதிகள் காணப்பட்டதுடன் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | சேவையினை விட்டுச் சென்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேவையினை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் தொடர்பான விபரங்கள் மற்றும் அதற்காக எடுத்த நடவடிக்கைகள் தொடர்பாக குறிப்பிட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன்.. |

### 1.6.3 பதிவேடுகளும் ஏடுகளும்

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துப் பதிவேடு | | |
| 1978 டிசம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2)பிரகாரம் 11 ஆம் அனுபந்தத்தின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 1978 டிசம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை / நிதிப்பிரமாணம் 502(2)பிரகாரம் 11 ஆம் அனுபந்தத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டினை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020.09.30 ஆந் திகதி அளவில் நாளது வரையாக்குவதாக அறிக்கை இடுகின்றேன். |
| (ஆ) கணனி மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | | |

| | | | |
|---|---|---|---|
| | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்க வில்லை | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேட்டினை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020.09.30 ஆந் திகதி அளவில் நாளது வரையாக்குவதாக அறிக்கை இடுகின்றேன். |
| (இ) | பிணைப் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | பிணைப் பதிவேடு பேணப்பட வேண்டும். | குறித்துக் கொள்கின்றேன் |
| (ஈ) | மின்சார உபகரணப் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நி.பி 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணப பதிவேடு பேணப்பட வேண்டும். | பதிவேடொன்று பேணப்பட்டு வருவதுடன் 2020.09.30 ஆந் திகதி அளவில் நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (உ) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகளுக்கான கையிருப்புப் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 1647(ஈ) இன் பிரகாரம் எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகளுக்கான கையிருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகளுக்கான கையிருப்பு பதிவேடு நி.பி 1647(இ) இன் பிரகாரம் பராமரிக்கப்பட வேண்டும். | பதிவேடொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| (ஊ) வாகனங்களைப் பதிவு செய்யும் பதிவேடு | | |
| நிதிப்பிரமாணம் 1647(ஈ) இன் பிரகாரம் வாகனங்களைப் பதிவு செய்யும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களைப் பதிவு செய்யும் பதிவேட்டினை நி.பி 1647(உ) இன் பிரகாரம் பராமரிக்கப்பட வேண்டும். | பதிவேடொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (எ) பொருட் கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகையைக் குறிக்கும் பதிவேடு | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை குழுவின் செயலாளரால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகையைக் குறிக்கும் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | பெறுகை குழுவின் செயலாளரால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகையைக் குறிக்கும் பதிவேட்டை பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.2 இன் பிரகாரம் பேணிச்செல்ல வேண்டும். | வருகையைக் குறிக்கும் பதிவேடொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 1.6.4 கணக்கீட்டு உத்தியோகத்தர் வழங்க வேண்டிய சான்றிதழ்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்துப் பேணப்படுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதனை ஆக்கபூர்வமாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஆக்கபூர்வமாக மீளாய்வு செய்யப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். | கருத்து தெரிவித்திருக்க வில்லை. |

வேண்டுமாயினும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 வங்கிக் கணக்குச் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தால் வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்த 06 மாதங்களைக் கடந்து ரூபா 9,035 பெறுமதியான 12 காசோலைகள் தொடர்பாக 396(ஈ) நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நி.பி 396(ஈ) பிரகாரம் வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக தாமதன்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது நிதிப்பிரமாணம் 396(ஈ)iii இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | காசோலையொன்றின் செல்லுபடிக் காலத்தை நீடிக்கும் போது நிதிப்பிரமாணம் 391 நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2018 திசெம்பர் மாதத்தில் எழுதப்பட்ட ரூபா 5,194,149 தொகையான 2 காசோலைகள் 2019 ஒக்தோபர் வரையிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | காசோலையொன்றின் செல்லுபடிக்காலத்தை நீடிக்கும் போது நிதிப்பிரமாணம் 391 நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 391 நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக் கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த் வெளியீட்டு மட்டத்தை அடைந்துகொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த தீயணைப்பு முறைமையை ஸ்தாபிக்கும் ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 19,867,214 ஆக இருந்தது. இம்முறைமையில் பொருத்தப்பட்டிருந்த உபபாகங்களின் விதந்துரைகள் சரியானதென சான்றிதழை தீயணைப்பு படையால் வழங்கப்பட்டிருந்தது, எவ்வாறாயினும் இம்முறைமை சரியாக செயற்படுவதாக குறித்த தனியார் கம்பனியால் பரீட்சித்து அறிக்கையொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | தீயணைப்பு முறைமை சரியாக செயற்படுவதாக அறிக்கையொன்றை தனியார் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தீயணைப்பு முறைமையின் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட போதும் அதனை பரீட்சித்து சரியானதென உறுதிப்படுத்துவதற்கு நீர் தாங்கி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு கையளித்தல் தேவையானதென பணிப்பாளர் நாயகத்தின் 2018 மே 28 ஆந் திகதிய DNM/1/3/1/20 ii ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினம் இந்நீர்தாங்கியின் நிர்மாண செயற்பாடுகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக நீர் தாங்கி நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிபிரமாணம் 139(4) இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச் சான்றுகளுக்கும் முறையான பற்றுச்சீட்டு பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2018 டிசம்பர் 31 இல் வரையப்பட்ட ரூபா 18,104,879 பெறுமதியான கொடுப்பனவுகளுக்குரிய 11 காசோலைகள் வழங்கப்படாது 2019 மே 27 வரை கணக்காளர் வசமிருந்தது. | நி.பி 139(4) இன் பிரகாரம் சகல கொடுப்பனவுகளுக்கும் முறையான பற்றுச்சீட்டு பெறப்பட்டு காசோலை தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். | பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்டு காசோலை உரிய ஆட்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட 05 செயற்திட்டத்திலும் 2018 ஆம் ஆண்டின் அமுலாக்கப்பட 01 செயற்திட்டத்திலும் எஞ்சிய ரூபா 2,201,775 கூட்டுத் தொகையானது திணைக்களத்தின் சிற்றுண்டிச்சாலையை நவீனமயப்படுத்திய ஒப்பந்தகாரருக்கு எதிரீடு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்ட முடிவில் எஞ்சும் தொகையை கொண்டு வரப்பட வேண்டியதுடன் அவற்றை அடுத்த ஆண்டின் செயற்திட்ட செலவினங்களிலிருந்து ஈடு செய்யக்கூடாது. | அப்போதைய வீடமைப்பு நிர்மாண மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2019.01.09 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு சுற்றுலாவின் போது இச்சிற்றுண்டிச்சாலை நன்றாக பரீட்சிக்கப்பட்டதுடன் அதன் போது இக்கட்டிடத்தை திருத்தம் செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டது. இதன் பிரகாரம் இச்செயற்பாட்டை விரைவாக நிறைவேற்றக் கொள்வதற்காக கட்டிடத் திணைக்களத்தினால் கையேற்கப்பட்ட ஒப்பந்தங்களிலிருந்து ரூபா 2,201,775 தொகை சேமிப்பாக இருப்பதாக கட்டிடத் |

| | | |
|---|---|---|
| | | திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் மொத்த மதிப்பீட்டிலிருந்து அத்தொகை கழிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டின் நிதிஏற்பாடுகளிலிருந்து எஞ்சிய ரூபா 3,409,671 தொகை கொடுப்பனவு செய்து இச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டது. |

**3.4 ஏனைய அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதான கெமறா அவதானிப்பு நிலையத்தில் இரவு பகல் அவதானிப்பு செயற்பாடுகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்விற்கு 2018 ஒக்தோபர் 25 ஆந் திகதி அளவில் அறிவிக்கப்பட்டிருந்த போதும் 2020 யூலை வரையில் இச்செயற்பாடு கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பிரதான கெமறா அவதானிப்பு நிலையத்தில் இரவு பகல் அவதானிப்பு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு கெமறா அவதானிப்பு பதவிகள் 3 வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் | கணக்காய்வு அவதானிப்புகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

**4. நிலைபேறான அபிவிருத்தி**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியதாக காணப்படுவதுடன் | | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டிற்குரியதாக திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென அறிந்திருந்த இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | ஏதேனும் செயற்பாடொன்றின் சரியான செயலாற்றலை அளவிடுவதற்காக தரவு அடிப்படையொன்று காணப்படுவது அவசியமாக இருந்த போதும் திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்வதற்காக சரியான தரவு அடிப்படையொன்றை ஏற்படுத்துவதற்கு தவறியிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்கு சரியான தரவு முறைமைகளை ஏற்படுத்த வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |
| (ii) | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக தயார்படுத்தும் போது ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து பணியாற்றியமை தொடர்பாக சான்றுகள் காணப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்திஇலக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு அரச நிறுவனங்ளுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றோம். |